குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 129 /2012

அ.சா. 2

2023–ம் ஆண்டு நவம்பர் 21–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | ஜாதி | |
| தந்தை பெயர் | ஜெயபால் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 5.35 மணி,

Accused Pannerselvam Present. APP is Mr.M.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் அம்மாபேட்டையில் குடியிருந்து கொண்டு தற்போது செல்வ மாளிகை என்ற நகைகடையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 தெரியும். அவர் கோயம்புத்தூர் ஜீவ்லர்ஸ் என்ற பெயரில் நகை கடை வைத்துள்ளார். சம்பவம் நடந்த காலத்தில் நான் அவரின் கடையில் சேல்ஸ்மேன் ஆக வேலை செய்து வந்தேன். சம்பவ காலத்தில் ஆஜர் எதிரி அ.சா.1 னின் கடையில் வேலை பார்த்து வந்தார்.

2. 2012 ம் ஆண்டு கேரளா மாநிலம் திருவனந்தம்புரத்தில் உள்ள பீமா நகை கடையில் இருந்து சுமார் 2 1/2 கிலோ தங்கத்தை ஆஜர் எதிரி வாங்கி கொண்டு சேலத்திற்கு பஸ்ஸில் வந்தார். இரவு பஸ்ஸில் வந்த போது ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து தங்கம் தொலைந்து விட்டது என்று சொன்னார். இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பின்பு போலீஸார் ஆஜர் எதிரியை விசாரித்தார்கள்.

3. சுமார் 4 நாட்கள் கழித்து 2 1/2 கிலோ தங்கத்தை ஆஜர் எதிரி பன்னீர் செல்வம் போலீஸாரிடம் கொடுத்து விட்டதாக கேள்வி பட்டேன். அ.சா.1 மேற்படி தங்கத்தை திரும்ப பெற்றுக் கொண்டதாக அவர் என்னிடம் சொன்னார். போலீஸார்

என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மாலை 5.42 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,.

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்

––––––– –––––– ––––